REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 9உ வெள்ளி (24—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 10உ சனி (25—12—54) [இதழ் 166

## துறந்துவிட்டாராம்!

ஆமதாபாத், டிச. 23—

சென்னையின் கவர்னராயிருந்த முன்னாள் பவநகர் மன்னரான கிருஷ்ணகுமார சிங்ஜி, இப்போது 'அரச போகங்களை'யும், 'அரண்மனை வாழ்வை'யும் துறந்து சாதாரண குடியானவ வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறாராம்.

அரண்மனையை விட்டுவிட்டு, ஒரு சாதாரண குடிசையில் அவர் வாழ்கிறாராம். மேலும் தனது நிலத்தில் இப்போது அவரே ஏர் பிடித்து உழுவதாக ஒரு செய்தி கூறுகிறது.

தனக்கு வருடந்தோறும் மானியமாகக் கிடைக்கும் 10 லட்ச ரூபாயையும் அவர் தர்ம காரியங்களுக்காக செலவிட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

# சாகுந்தல நாடகத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## பார்வையாளர் அமருவதில் புகுத்திய நிற வேற்றுமையே காரணம்

### சில வெள்ளையர்களும் வீடு திரும்பினர்!

ஜோகனஸ்பர்க், டிச. 24—

வைட் வாடர்ஸ்ராண்ட் பல்கலைக் கழகத்தின் 'பெரிய அரங்கில்', காளிதாசன் எழுதிய 'சாகுந்தலம்' நாடகம் நடிக்கப்பட்டது. நாடகப் பாத்திரங்கள் அனைத்தும் இந்தியர்களாலேயே நடிக்கப்பட்டன. அந்நாடகத்தைக் காணச் சென்ற வெள்ளையர்—அல்லாதவர் அனைவரையும், நாடகத்தைக் காண விடாமல் தடுக்க வேண்டுமெனும் நோக்குடன், மேற்படி நுழைவு வாயிலின் முன், இந்திய ஆடவரும் பெண்டிரும், நிற பேதத்தைக் கண்டிக்கும் வாசகங்கள் கொண்ட அட்டைகளைத் தாங்கிக்கொண்டு, மறியல் செய்யத் துவங்கினர். நிற பேதத்தைக் கண்டிக்கும் துண்டு அறிக்கைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் விநியோகித்தனர்.

நாடகம் பார்க்கின்றவர்கள் உட்காரும் ஏற்பாட்டில் நிற பேதத்தைப் புகுத்தி இருக்கும் காரணத்தால், நாடகத்தை நடிக்கக் கூடாது என, டிரான்ஸ்வால் இந்திய இளைஞர் காங்கிரஸ், நாடகத்தை நடித்த டர்பான் 'இன்டர்நேஷன் கிளப்' உறுப்பினர்களை எழுத்துமூலம் வேண்டிக்கொண்டது. (மேற்படி 'கிளப்' உறுப்பினர்களும் இந்தியர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது) அவ்வேண்டுகோளை நடிகர் குழுவினர் அலட்சியப் படுத்திவிட்டனர். அதன் எதிரொலியாகத்தான் மேற்படி மறியல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது.

நாடகத்தன்று மாலையே டிக்கட்டுகள் அனைத்தும் விற்பனையாகி விட்டிருந்தபோதிலும், நாடகம் துவங்கினதும், மூன்றில் ஒரு பங்கு இடம் காலியாகவே இருந்தது.

நாடகம் பார்ப்பதற்கான ஒரு இடத்திற்காக பத்துபவுன் அதாவது ரூ. 133 வரை கொடுத்து டிக்கட் பெற்றிருந்த வெள்ளையர்கள்கூட, நுழைவு வாயிலில் மறியல் நடப்பதைக் கண்டதும் பெற்றிருந்த டிக்கட்டுகளைக் கிழித்தெறிந்துவிட்டு வீடு திரும்பிவிட்டனர். சில இந்தியர்களும் இவ்வாறு நடந்துகொண்டனராம்!

இப்படி நிற வேற்றுமை காட்டப்பட்டிருக்கிறது என்ற விஷயம் தங்களுக்கு ஏற்கனவே தெரியாது என்று இந்தியர்களில் சிலர் கூறினார்கள். நடிகர்களில் ஒருவரும் நடிக்க முடியாது என முதலில் மறுத்ததாகவும், ஆனால், ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுவிட்டதால் நாடகத்தை நடிப்பது என்ற முடிவுக்கு அவரும், மற்ற நடிகர்களும் வேண்டாவெறுப்பாக வந்ததாகவும் தெரியவருகிறது.

பல்கலைக் கழகத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட்டே மேற்படி நிற பேதம் காட்டப்பட்டதாக, தென்னாப்பிரிக்க இன உறவு கழகத்தின் தலைவரான டாக்டர் எலென் எல்மென் அறிவித்தார். அவர்தான், நாடகத்தின் பொறுப்பாளரும் ஆவார்.

பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் எவரும் மேற்படி மறியலில் கலந்துகொள்ளவில்லை என நம்பப்படுகிறது.

## 'உலக அமைதியை நிலைபெறச் செய்வதே எங்கள் உள்ளக்கிடக்கை'

### 'அதற்கான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்வோம்'

### டிட்டோ-நேரு கூட்டறிக்கை

புதுடில்லி, டிச. 23—

"உலக மக்கள் முன்னேறவும், மனித இனத்தின் நாகரிகம் அழியாமல் உயிர் பிழைத்திருக்கவும் வேண்டுமாயின், பல்வேறு சமூக அமைப்புத் தத்துவங்களை உடையவர்களாக இருப்பினும், நாம், அமைதியான முறையில் ஒன்று சேர்ந்து வாழ்வதின் அவசியத்தை உணர்ந்து ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியே கிடையாது; இது, நமது அத்தியாவசியமானதொரு கடமையுமாகுமென்றும் நாங்கள் வற்புறுத்தி உறுதி செய்கிறோம்,"

—என்று, இந்தியப் பிரதமர் நேருவும், யூகோஸ்லேவிய குடியரசுத் தலைவர் மார்ஷல் டிட்டோவும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

மார்ஷல் டிட்டோ இந்தியாவிற்கு அதிகார பூர்வமான வருகை தந்துள்ளதை யொட்டி, அவர், இந்தியப் பிரதமருடன், கடந்த 5 தினங்களாய் உலகத்தின் பல்வேறு அரசியல் பிரச்சினைகள் குறித்தும், நெருக்கடி மிகுந்த விஷயங்கள் குறித்தும் திறந்தமனம் கொண்டு நட்புறவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திய பிறகு இருவருமாகச் சேர்ந்து கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

மேலும் அந்த அறிக்கையில் கூறப்படுவதாவது:—

"மேற்கண்ட தத்துவத்தை ஒப்புக்கொள்வதால், சமாதானம் நிலவும் பகுதிகள் விரிவடையும். யுத்தங்களின் கோரமான விளைவுகள் தோன்றுவதற்கான சந்தர்ப்பங்கள் குறையும்; இதனால் நம்பிக்கை மிகுவதுடன், உலக மக்கள் ஒருவருக்கொருவர். ஒத்துழைப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக ஏற்படும்.

"உலகத்தில் நிலவும் மனத்தாங்கலும் நெருக்கடியும் குறைவதற்கு, இந்தத் தத்துவம், அத்தியாவசியமான அடிப்படையாகும்.

"உலகில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடிகள் தணிந்து வருவதை வரவேற்கிற நாங்கள் மேலும் மேலும் உலகத்தில் நெருக்கடிகள் தணியவும், அவை அதிகரிக்காமல் தடுப்பதற்காகவும் எங்களின் உண்மையான முயற்சிகளை விடாமல் செய்வோம் என்று உறுதி கூறுகிறோம்."

## 'ஐந்தாண்டுத் திட்டம் வேலையின்மையைப் போக்க உதவவில்லை'

### 'கல்விமுறையும் அதற்கு காரணம்'

திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தாவின் ஒப்பாரி

புதுடில்லி, டிச. 22—

"மாநில அரசாங்கங்கள் நிலச் சீர்திருத்தத்தில் ஒரு புரட்சிகரமான, தலைகீழ் மாற்றத்திற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும், அத்திட்டங்களைக் கூடிய விரைவில் நிறைவேற்ற வேண்டுமெனவும் மத்திய அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது. நிலச் சீர்திருத்தம் எந்த அளவு நடைபெற்றிருக்கிறது என்பது இன்னும் இரண்டாண்டுகளில் தெளிவாகத் தெரியக்கூடும்."

"வேலை கிடைக்கச் செய்வதென்பது கல்வி முறையைப் பொறுத்ததாகும். இப்போதுள்ள கல்விமுறை திருப்திகரமானதாயில்லை. நமக்குத் தேவையான வேலைகளுக்கும், தரப்படுகிற கல்விக்கும் தொடர்பே ஏற்படுத்த இயலாது போய்விட்டது.'

—இவ்வாறு, ஐந்தாண்டுத் திட்டத்தின் அபிவிருத்தி குறித்த விவாதத்தை மக்கள் சபையில் தொடங்கிவைத்த திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா கூறியிருக்கிறார்.

"வேலை தருவதைப் பொறுத்த வரையில், சர்க்கார், பிரச்சினையைத் தீர்க்க எந்தவிதத் திட்டமான பரிகாரத்தையும் தரவில்லை. 5 ஆண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இப்போதுள்ள சூழ்நிலைகளையும், நிலவும் உண்மைகளையும் வைத்துக்கொண்டு பார்த்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துவிடவோ, அன்றி வேலைக்கான அதிகமான சந்தர்ப்பங்களை உருவாக்கவோ திட்டத்தால் முடியாதென்பதைத் தெளிவாக உணர முடியும்.

திட்டத்தை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் நிறைந்திருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்தக் குறைகளை நாம் அலட்சியப்படுத்தி விடவில்லை. கன இயந்திரத் தொழில்கள் நிறுவுவதில் நாம் மிக மந்தமாயிருக்கிறோம்; ஆனாலும் திட்டம் நல்லதுதான் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்."

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## சிபாரிசு செய்வதில் அனைவரும் ஒரே தரத்தினராம்!

இந்திய மேல் சபையில் கட்ஜுவின் குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 23—

"வேலைகளுக்கு சிபார்சு செய்வதில் உறுப்பினர்கள் எல்லோரும் ஈடுபடுகின்றனர்,"

என்று, இந்திய மேல் சபையில் கட்ஜு கூறினார்.

இதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆட்சேபித்தனர். 10 நிமிட நேரம் சபையில் ஒரே எதிர்ப்புக் கோஷம் மிகுந்து காணப்பட்டது.

தன் சொற்களை அமைச்சர் வாபஸ் பெறவேண்டுமென்று பலர் கோரினர்.

"நான் சிபார்சு செய்த சம்பவம் ஒன்றைக் கூற முடியுமா?" என்று புபேஷ் குப்தா கோரினாராம்.

இறுதியில் கட்ஜு, எதிர்ப்புகளுக்கிடையே, வேலைக்கு நியமிக்கும் பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் அதிகாரிகளை யாரும் வற்புறுத்துவது கிடையாது; ஆனால், வேலைக்குத் தகுதியுள்ளவர்களைப் பற்றி எல்லோரும் நினைவூட்டுகிறார்கள்," என்று கூறியபோது, சபை சிரிப்பில் மூழ்கியதாம்!

## ஒழிகிறது!

1955 ஜனவரி 1-ந் தேதி முதல் இந்திய ரயில்வேக்களின் ஒரு பகுதியில் முதல் வகுப்புகள் ஒழிக்கப்படுமெனவும், எஞ்சியுள்ள பகுதிகளில் ஏப்ரல் மாதத்திற்குள் ஒழிக்கப்பட்டு விடுமெனவும், ராஜ்ய சபையில் ஓ. வி. அழகேசன் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

## ஐ. நா. சபை ஊழியருக்கு 'விசா' மறுப்பு

ஐ. நா. சபை ஊழியர்களில் ஒருவரான சுரேந்திர பட்டேல் என்பவருக்கு, அமெரிக்கா செல்ல 'விசா' அனுமதியை பம்பாயில் உள்ள அமெரிக்க தூதுவராலயம் மறுத்து விட்டதாம். இச்செய்தியை இந்திய மேல் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பண்டித நேரு கூறினர்.

'விசா' அனுமதி மறுக்கப்பட்டது குறித்து ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்க சர்க்காரை அணுகியது என்று அவர் மேலும் கூறினர்.

## ஆண்டொன்றுக்கு 3,000 பேர் மரணம்; 79,000 பேருக்குக் காயம்

சென்னை மாநிலத்தில் போக்குவரத்து விபத்துக்கள்

★

சென்னை, டிச. 24—

ஆண்டு ஒன்றுக்கு சென்னை மாநிலத்தில் 3,000 பேர் போக்குவரத்து விபத்துக்களால் மரணம் அடைகிறார்களாம்.

இந்த விபத்துக்களால் காயமுறுவோரின் தொகை 79,000. இந்தச் செய்தியை போக்குவரத்து உதவி கமிஷனர் தெரிவித்திருக்கிறார்.

நாள்தோறும் இந்த விபத்துக்களால் 7 பேர் மரணமடைகிறார்களென்றும், 215 பேர் காயமுறுகிறார்கள் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 24—12—1954 வெள்ளி


# அடிகளார் ‘அருட் கூத்து!’

எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றிக் கொன்று, ‘அன்பே சிவம்’ எனும் சிவநெறியைத் தழைத்தோங்க வைத்த சைவ சமயக் குரவர்களில் எஞ்சி நின்றவரே இக்குன்றக் குடிகளார் என, ஒன்றிரண்டு அரசியல் கட்டியக்காரர்களும், பெரும் பொருளை இளமையில் ஈட்டி வைத்துவிட்டு, பால் கடைவாய்ப் படுமுன் பரமனைத் தேடியாக வேண்டும் என்ற தன்னலத்தால் தூண்டப்பட்டு, ‘சிவ சிவ’ என முணுமுணுத்திட வசதியான இடந் தேடிக் கிடந்த சில பல திருமேனிகளும், பாராட்டிப் புகழ் பாடி வருவதை நாம் அடிக்கடி கண்டு வருகிறோம். இது கண்டு நாம் அச்சமும் கொள்ளவில்லை—அருவருப்பும் அடையவில்லை—அதிர்ச்சியும் பெறவில்லை; அவைகளுக்கு மாறாக ஆச்சரியமே கொள்ளுகிறோம்.

விஞ்ஞான அறிவொளியில் விளையாடிக் கொண்டு, அஞ்ஞான இருட் குகையின் அருமை பெருமைகளைக் குறித்து, அறிந்து அனுபவித்தவர், அகச் சான்று புறச் சான்றுகளைக் காட்டி வாதிட்டு வெல்ல முயலுவதுபோல், அறிவுலகத்தோடு மோதிட முன் வருகிறாரே எனக் கருதும்போது, அடிகளாற்பால் இரக்கமும், அவர் செயல்கண்டு ஆச்சரியமும் நமக்கு ஏற்படுகின்றன. ‘இயங்கும் உடல் அனைத்தும் ஈசன் கோயில்’ என்ற உண்மையில் பற்றுடையார் எவருக்கும், அடிகளாரிடம் அனுதாபமும், அவர் போக்கில் ஆச்சரியமும் ஏற்படத்தான் செய்யும்.

ஏடும், பண் நிறைந்த நூற்களும், படமாடும் கோயில்களும், அவைகளில் விண்முட்ட ஓங்கி நிற்கும் கோபுரங்களும், சுற்றியுள்ள கருங்கல் மதிற்சுவர்களும், நாள் தவறாமல் நடைபெறும் திருவிழாக்களும், இவ்வளவும் நம்பி வாழும் குருக்கள் கூட்டங்களும், புதுமுறுக்குடனும், பளபளப்பான புது முகத்துடனும் இருந்த காலத்தில்தான், அடிகளார் எதிர்க்கும் ‘அறிவொளி’ மெள்ள மெள்ள மக்களைப் பற்றத் தொடங்கியது.

அறிவு வளர்ச்சியின் காரணமாக, ‘படமாடும் கோயில்’ பாழ் மண்டபமாக மாறிவிட்டது. அப்பாழடைந்த ‘படமாடும் கோயில்கள்’ தமது முன்னோர்களின் சிறப்புத் திறமையைக் காட்டும் சிறந்த காட்சிப் பொருட்களாகப் பாதுகாக்கப்பட வேண்டிய நிலையினைப் பெற்றுவிட்டன. அறிவுவேகத்தின் திருவிளையாடலாகும் இது. இம்மகத்தான உண்மையை மறந்து, மீண்டும் பழமையை முன்போல் உயிர் பெறச் செய்துவிட முயல்வது வீண்—முக்காலும் வீணேயாகும்.

முச்சந்திக் கோயில்களும், அவைகளில் நடைபெற்றுவரும் திருவிழாக்களும் இக்கால மக்களுக்கு ‘தெய்வ நம்பிக்கை’யை ஊட்டத் தவறிவிட்டன என்றால், அடிகளாரும் மற்ற ‘அருளுடை’ பல்லக்குத் தூக்கிகளும், எப்பொழுதோ, எங்கேயோ ஒரு மூலையில் போடும் சிவநெறிக் கூச்சலா, அந்த நம்பிக்கையை ஊட்டிவிடும்? அந்த நம்பிக்கை ஏன் மக்களை விட்டு நீங்கிற்று என்பதை ஆராய்ந்து அறிந்து கொண்டால் அல்லாது, மீண்டும் அந்நம்பிக்கையை மக்கள் கொள்ளச் செய்வதற்கான வழியைக் காட்டுவது என்பதும் எவராலும் இயலாததேயாகும்.

மதுரையில் நடைபெற்ற இராமாயண நாடகத்தை எதிர்த்ததோடு நின்றுவிடாமல், பக்தியூட்டும் நாடகங்களை சிவநெறிச் செல்வர்களும், மற்ற ‘ஆஸ்திக’ அன்பர்களும் ஆங்காங்கே நடத்திக்காட்ட வேண்டுமென, குன்றக்குடி அடிகளார் குடந்தையில் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்தின்போது, குறிப்பிட்டார் எனத் தெரியவருகிறது. ‘இருளா? ஒளியா?’ எனப் பெயரிட்டுத் தாம் எழுதியுள்ள நாடகம், தனது சீடர்களால் விரைவில் மதுரையில் நடித்துக் காட்டப்பட இருக்கிறது என, அவர் அதே கூட்டத்தில் கூறினதாகவும் நம்பப்படுகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டில் நடைபெற்று வந்த கூத்துக்கள் அனைத்தும் தெய்வ நம்பிக்கையை வளர்க்கும் கூத்துகளே என்பதை அனைவரும் அறிவர். வள்ளாள மகாராஜன் கதை, சிறுத்தொண்டன் கதை, மாபாரதக் கூத்துக்கள் ஆகிய ‘புண்ணிய’ கதைகள்தான், தமிழ் நாட்டு அரங்கங்களில் கூத்தாடிக் கிடந்தன. அவைகளைப் போற்றிப் புகழ்ந்து, களித்துக் கிடந்த மக்கள்தான், தங்கள் கருத்தில் வளமேற்பட்டதும் அவைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டனர்.

அவர்கள் அறிவுப் பசிக்கு உணவு தரும் வகையில், அதற்குப் பிறகுதான் புதுமை பகுத்தறிவு நாடகங்கள் தோன்றலாயின. அவை மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகின்றன. அவ்வளர்ச்சிக்கு முடிவு கிடையாது. அறிவின் இயல்பு முடிவிலாது வளர்ந்து கொண்டே இருப்பதுதானே?

புராண நாடகங்களைக் காண்பதில் திருப்தி கண்ட மக்கள் இன்று இல்லை. அவர்கள் மறைந்தே போய்விட்டனர். பகுத்தறிவு நாடகங்களைத் தேடும் புத்தறிவு பெற்றுள்ள மக்கள்தான் இப்பொழுது இருக்கின்றனர். இவர்களிடத்தில் மீண்டும், புராண நாடகங்களை நடத்தி, பழங்கால இருளுக்கு அவர்களை இட்டுச் செல்லுவதோ அல்லது இழுத்துச் செல்லுவதோ எவராலும் முடியக் கூடியதல்ல. சிவ வேடந்தாங்கிகளாலும்கூட அது முடியாது!

அடிகளார் மேற்கொள்ளவிருக்கும் கூத்தாடும் திருப்பணியை நாம் இரு கையேந்தி வரவேற்கிறோம். காரணம், அவருக்கு ஏற்படும் தோல்வியைக் கண்டபிறகாவது, நாடகத்தையே ஒரு தொழிலாகக்கொண்டு புராணக் கதைகளை நடத்தி வரும் ஒருவர் இருவராவது அதை விட்டுவிலக முன்வருவர் அல்லவா?

‘கட்டை கடைத்தேறிவிடும்’ என்ற நம்பிக்கையில் காணிக்கையாகப் பெற்ற வெண்பொற் காசுகளை வேறு எது எதற்கோ செலவழித்து இன்பத்தில் நிலைத்திருக்கும் குன்றக்குடி அடிகளார், கூத்துத் துறைக்குத்தான் கொஞ்சம் செலவழித்து இன்பம் பெற்று மகிழட்டுமே. அது, இந்தியப் பேரரசால், அவ்வருள்நெறியாருக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். எனவே, அவர், அதை செயலாற்ற முற்படுவதில் யார்தான் ஆட்சேபம் சொல்லப் போகிறார்கள்? சிங்கை சென்று திரும்பியதும், ‘இருளா—ஒளியா?’ கூத்தை கூடல்மாநகரில் திறந்தவெளி அரங்கில் நடத்தி, ‘பாபாத்மாக்’களைத் திருத்தி, சிவப்பேற்றுக்கு ‘அச்சாரம்’ கொடுப்பதை, அடிகளார் கைவிட்டு விடக் கூடாது என வேண்டிக் கொள்கிறோம்.

### அணுசக்தி ஆயுதங்கள்

அமெரிக்கக் கொள்கை விளக்கம்

“இராணுவ தேவைகளை ஆலோசித்து அணுசக்தி ஆயுதங்களை உபயோகிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடலாம்; அந்நிலை படிப்படியாக ஏற்பட்டுவிடக் கூடிய இராணுவ கொள்கையைத்தான் அமெரிக்க சர்க்கார் பின்பற்றுகிறது.” இவ்வாறு அமெரிக்க அயல் நாட்டு மந்திரி டல்லஸ் கூறியிருக்கிறார்.

## மதுவிலக்கில் விதி விலக்கு!

சென்னை, டிச. 24—

மேல்நாட்டு முறையில் நடத்தப்பட்டு வரும் சிற்றுண்டிச் சாலைகளின் நிர்வாகி, இந்தியாவுக்கு வருகின்ற அயல் நாட்டுப் பிரயாணிகளுக்கும், இந்தியாவிலேயே தங்கியிருக்கும் அயல் நாட்டவருக்கும் சாராயம் போன்ற மதுவகைகளை விற்கவும், அவற்றைக் கைவசம் வைத்துக் கொள்ளவும் அனுமதி பெற்றுக் கொள்ளலாம் என்று சென்னை சர்க்கார் புதியதொரு விதி முறையைத் தயாரித்திருக்கிறது.

அரசாங்கம் அமைத்துள்ள ரூப்நாராயண்பூரில் உள்ள ஹிந்துஸ்தான் கேபிள் கம்பிகள் உற்பத்திசாலை, பூனாவுக்கருகில் பிம்ப்ரீ என்னுமிடத்திலுள்ள பெனிசிலின் உற்பத்திச்சாலை, டில்லியில் உள்ள டி. டி. டி. உற்பத்திச்சாலை ஆகியவற்றில் இன்னும் சில வாரங்களில் உற்பத்தி துவங்கப்படவிருக்கிறது.

இந்திய இரயில்வேக்களுக்குச் சொந்தமாக நாடு முழுவதிலும் மொத்தம் 133 மின்சார நிலையங்கள் உள்ளன. அவை, ஆண்டிற்கு 35·44 கோடி கிலோ-வாட் மின்சார சக்தியை உற்பத்தி செய்து வருகின்றன.

# அரசியல்வாதிகள் மறக்கப்படலாம்!

## அழியாத புகழ் பெற்றவர் விஞ்ஞானிகளே!

**“எனது பெயர் பல நூற்றாண்டுகள் வாழும்; ஆனால், பல அரசியல்வாதிகளைப் பற்றிய நினைவு இன்னும் சில ஆண்டுகளில் யாருமே கவலைப்படாதபடி மங்கிமறைந்து போகும்,”**

என்று, விஞ்ஞானியான டாக்டர் சஹா, மக்கள் சபையில், பிரதமர் நேரு, தாம், விஞ்ஞானியாயிருப்பதினின்றும் மறைந்து விட்டதாகக் கூறியதை எதிர்த்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டித நேரு, சர்க்காரின் பொருளாதாரக் கொள்கை குறித்துப் பேசுகையில், ‘டாக்டர் சஹா இப்போது ஒரு விஞ்ஞானியாக யில்லை.’ என்று குறிப்பிட்டார்.

அதைக் கண்டித்து, டாக்டர் சஹா, அறிக்கை ஒன்றை சபையில் வெளியிட்டபோது, எதிர்க் கட்சியினர் பலத்த ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

அவர் கூறியிருப்பதாவது:—

“கடந்த நவம்பர் மாதத்தில் மாஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டில் நான் கலந்துகொள்ளுமாறு ‘தொலைபேசி’ மூலம் பணிக்கப்பட்டேன். குறுகிய அவகாசத்தில் நான் முடியாதெனக் கூறியும், நான் கலந்து கொள்ளத்தான் வேண்டுமென்றும், எனது பெயரையும் பண்டித நேரு மாஸ்கோவுக்கு அனுப்பிவிட்டதாகவும், நவம்பர் 26-ந் தேதியன்று நான் மாஸ்கோவில் அங்குள்ள விஞ்ஞானிகளால் எதிர்பார்க்கப்படுவதாகவும் வற்புறுத்தப்பட்டேன். பின்னர், நானும் அங்கு சென்று மாநாட்டில் சொற்பொழிவாற்றினேன்; அது அங்கு, வெகுவாக வரவேற்கப்பட்டது. இதன்படி கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வரை நான் ஒரு விஞ்ஞானியாகவே பண்டித நேருவால் கருதப்பட்டு வந்துள்ளேன்.”

## நீதி மன்றங்களிலுள்ள பாரசீக சொற்கள்!

அமர்நாத்ஜா கருத்து

“சாதாரண மனிதர்களால் புரிந்துகொள்ளும் அளவுக்கு உருது, பாரசீகம் ஆகிய மொழிகளின் சொற்கள் பல நீதி மன்றங்களில் வழங்கி வருகின்றன; வடமொழியின் கலப்பினால் உருவான இந்தி மொழிக்காக இச்சொற்களை நீக்கிவிடுவதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்,”

என்று, ஆரா வழக்கறிஞர்களின் சங்கத்தில் பேசுகையில், அமர்நாத்ஜா குறிப்பிட்டார்.

“துளசிதாஸ்கூட, தன்னுடைய கவிதைகளில் உருது சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்” என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் தேசிய மொழிக்கான பெயர் ‘பாரதி’ என்று இருக்க வேண்டுமென்றும், ‘இந்தி’ என்ற சொல், அன்னியச் சொல் என்றும் அவர் கூறினார்.

## ஆந்திராவில் 3 புதிய தொழிற்சாலைகள்

ஆந்திராவில் மூன்று உர உற்பத்தித் தொழிற்சாலைகளும், இரண்டு சிமெண்டு தொழிற்சாலைகளும் சீக்கிரமே ஆரம்பிக்கப்படும்.

உர உற்பத்தித் தொழிற்சாலையில் ஒன்று விஜயவாடாவில் சர்க்காரினால் ஆரம்பிக்கப்படுமென்றும், மற்ற இரண்டில் ஒன்று பாரி கம்பெனியாரால் கிருஷ்ணா கால்வாய்ப் பகுதியிலும், மற்றொன்று, மங்களகிரியிலும் அமைக்கப்படுமென்றும் தெரிகிறது.

இத்தொழிற்சாலைகளுக்கான லைசென்சுகள் சீக்கிரமே வழங்கப்படுமாம்.

இரண்டு சிமெண்டு தொழிற்சாலைகளும் தனி நபர்களால் ஆரம்பிக்கப்படுமாம்.

எரகுண்டலா, மச்சேர்லா ஆகிய இடங்களில் இத்தொழிற்சாலைகள் துவங்கப்படும்.

## ஷெட்யூல்ட் வகுப்பினருக்கு இலவசக் கல்வி

கடந்த 1953—54-ம் ஆண்டில் 10,000 இலவசக் கல்விச் சலுகைகள், தகுதியுள்ள ஷெட்யூல்ட் வகுப்பு மாணவர்களுக்கு ரூ. 45,37,000 செலவில் தரப்பட்டுள்ளதாக மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவையன்றி, 2,474 இலவசக் கல்விச் சலுகை ஷெட்யூல்ட் வகுப்பினருக்கும், 7,780 கல்விச் சலுகை பின் தங்கிய வகுப்பினருக்கும், இந்த ஆண்டில், முறையே ரூ. 12,31,000; ரூ 48,28,000 செலவில் தரப்பட்டுள்ளதாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள அந்த அறிக்கை கூறுகிறது.

வெளிநாடுகளில் சென்று கல்வி பயிலுவதற்கான வாய்ப்புகளும் ஆறு பேருக்கு இலவசமாகத் தரப்பட்டன.

பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றிற்கான கட்டணங்கள் செலுத்துவதினின்றும் ஷெட்யூல்ட் வகுப்பு மாணவர்களுக்கு விதிவிலக்களிக்குமாறு மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் சுற்றறிக்கையொன்றும் அனுப்பியுள்ளதாம்.

சென்னை, ஆந்திரா, திரு—கொச்சி உட்பட 15 மாநிலங்கள் இதற்கு ஒப்பிவிட்டனவென்றும், எஞ்சிய மாநிலங்கள் படிப்படியாக கட்டண விலக்குத் தருவதாகக் கூறியுள்ளனவென்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

## ‘இட்லி’க்குப் பெருமை!

சென்னைக்கடுத்த ஆவடியில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் மாநாட்டின்போது, மாநாட்டிற்கு வருவோருக்கு தென்னிந்தியாவின் மிகச் சிறந்த உணவு வகைகள் பரிமாறப்படுமெனவும், அவற்றில், ‘இட்லி’ பெருமைக்குரிய இடம் பெறுமென்வும் சொல்லப்படுகிறது.

‘இட்லி’ பெரும் அளவில் தயாரிப்பதற்காக, பிரம்மாண்டமானதொரு ‘பாய்லர்’ ஆவடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாம். மேலும் இட்லிக்குத் தேவையான மாவு தயாரிப்பதற்காக அரிசியைக் குழம்பாக்கும் இயந்திரம் ஒன்றும் தயாராகிறதாம்.

சமையல் ஏற்பாடுகளில் ‘கோதுமை’ உணவுப் பிரிவொன்றும் இருக்குமெனவும், அந்த கோதுமை உணவுகூட பண்டைத் தமிழர் வழக்கப்படி, வாழை இலையில்தான் பரிமாறப்படும் எனவும் தெரிய வருகிறது.

## இந்திய துணிகளுக்கு யோகமா?

இந்தியப் பருத்தி ஜவுளிகட்கும், நூலுக்கும் மேல்நாடுகளில் இப்போது நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதாகவும், இங்கிலாந்தில், ஒரு பிரிட்டிஷ் கம்பெனி இந்திய ஜவுளிக் கடையொன்றை ஆரம்பிக்க இருப்பாகவும் கூறப்படுகிறது.

இந்திய வாயில் துணிகளும், மல் துணிகளும் தேவை என்று சுவிட்சர்லாந்து கம்பெனி ஒன்று கேட்டிருக்கிறதாம்.

மேலும், ஹாலந்து, மேற்கு ஜெர்மனி, கென்யா, இஸ்ரேல், மௌரிஷஸ், ஆஸ்திரேலியா, கி. ஆப்பிரிக்கா, பிஜித்தீவுகள், இலங்கை ஆகிய நாடுகளும் இந்திய ஜவுளித் துணிகளை விரும்பிக் கேட்கின்றனவாம்.

# போர்த்துகீசிய ஆதிக்கத்திற்கு இலங்கையின் ஆதரவு

## ‘விளைவுகளை அறியாத போக்கு’ என ‘சிலோன் அப்சர்வர்’ கண்டனம்

கொழும்பு—

கோவா மீது இந்திய சர்க்கார் விடுத்துள்ள பொருளாதார முட்டுக்கட்டையைத் தகர்க்க கொழும்பு துறைமுகத்தின் வழியாக போர்ச்சுகீசிய கப்பல் போக்குவரத்து நடைபெற இலங்கை சர்க்கார் தடை எதும் விதிக்கவில்லை என்று தெரிகிறது.

கொழும்பு துறைமுகத்தில் முன்கூட்டி அனுமதி எதும் பெருமலேயே எந்தக் கப்பலும் நுழையலாமெனவும், துறைமுகத்தை உபயோகப்படுத்திக் கொள்வதற்காக கொடுக்கவேண்டிய பாக்கித் தொகைகளை மட்டும் செலுத்திவிட்டால் போதுமானது எனவும் துறைமுக அதிகாரி ஒருவர் கூறியுள்ளாராம்.

இது பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டு, இலங்கையிலுள்ள ‘சிலோன் அப்சர்வர்’ இதழ் குறிப்பிட்டுள்ளதாவது :—.

“இவ்வாறு செய்வதினுல் எற்படுகின்ற அரசியல் விளைவுகள் என்ன என்பதை ஆலோசிக்காமலேயே இலங்கை சர்க்கார் இதனை அனுமதித்திருக்கின்றது ; இலங்கைப் பிரதமர், நாட்டில் இல்லாத நேரத்தில் இலங்கை இம்மாதிரியான ஒரு விஷயத்தில் சிக்கிக் கொள்வதால் பெரியதொரு ஆபத்தான சர்வதேச நெருக்கடியில் அகப்பட்டுவிடும்; ‘போர்ச்சுகீசியகப்பல் போக்குவரத்தை அனுமதிப்பதால், இந்தியாவில் போர்ச்சுகீசியர் தங்கள் பகுதிகளை மீட்பதில், இலங்கை உதவி புரிந்தது’ என்ற குற்றச்சாட்டையும் எற்கவேண்டிய நிலை எற்படும்.”

## ரூ. 3000-த்திற்கும் அதிகமாக சம்பளம் பெறுவோர்!

இந்திய அரசாங்க அதிகாரிகளில் 70 பேருக்கும் அதிகமானவர்கள், மாதம் ஒன்றுக்கு ரூ. 3000-த்திற்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்களாக உள்ளனர்.

இவர்களன்றி பாதுகாப்பு இலாகாவில் உள்ள அதிகாரிகள் பலர், இந்த அளவு சம்பளத்தைக் காட்டிலும் அதிகமான சம்பளம் வாங்குகின்றனர்.

பிரதம நீதிபதி, மற்றும் தலைமை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ‘ஆடிட்டர்-ஜெனரல்’ ‘காம்ப்ட்ரோலர்’ ஆகியோர் சம்பளம், மக்கள் சபைச் சட்டங்கள்படியோ, அரசியல் சட்டப்படியோ நிர்ணயிக்கப்படுகின்றன ; அவையும் ரூ. 3000-க்கு அதிகமானவைதான்.

“இந்த அதிகாரிகளின் சம்பள விகிதங்களை, மத்திய அரசாங்க மந்திரிகளின் சம்பள அளவுக்குக் குறைக்கிற நோக்கம் எதுவும் சர்க்காருக்கு இப்போது இல்லை,” என்று டாக்டர் கட்ஜூ மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

யூனியன் சர்க்கார் மந்திரி ஒருவருக்கு மாதச் சம்பளம் ரூ. 2,250 ; படி ரூ. 500-ஆக மொத்தம் ரூ. 2,750 கிடைக்கிறது.

## கோலாரில் தங்க உற்பத்தி குறைவு

கோலார் தங்க வயலில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு தங்கம் உற்பத்தி குறைந்துள்ளது.

“சுரங்க வேலையில் உள்ள கஷ்டம், அதிகமான ஆழத்தில் தங்கங்கள் அமைந்திருப்பது, உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பது முதலியனவே தங்க உற்பத்திக் குறைவுக்குக் காரணம்,” என்று மத்திய நிதி மந்திரி கே. டி. மாளவியா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

1952-ம் ஆண்டில், 2,53,264 அவுன்ஸ் சுத்தத் தங்கம் உற்பத்தி செய்யப்பட்டது ; ஆனல் 1953-ல், 2,23,375 அவுன்ஸ் சுத்தத் தங்கமே உற்பத்தி செய்ய முடிந்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## பாகிஸ்தானுக்கு புதிய அரசியல் நிர்ணய சபை

டாக்கா, டிச. 22—

இப்போதுள்ள மாகாண சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட புதிய அரசியல் நிர்ணய சபை ஒன்று பாகிஸ்தானில் அமைக்கப்படும் என்று தெரிகிறது.

இப்படி அமைக்கப்படும் அரசியல் நிர்ணயசபை, பாகிஸ்தானுக்கென்று அரசியல் சட்டமொன்றை வகுக்குமென்றும், பின்னர் அதன் அடிப்படையில் பொதுத் தேர்தல் நடைபெறும் என்றும் சொல்லப்படுகிறது.

கிழக்கு பாகிஸ்தான் சட்டசபையில் உள்ள கட்சித் தலைவர்கள் 25 அல்லது 30 பேர்களை அரசியல் நிர்ணயசபைக்கு நியமனம் செய்யுமாறு கோரப்படுவார்கள் என்று தெரிகிறது.

இதேபோல் மேற்கு பாகிஸ்தான் மாகாண சட்டசபைகளும் கேட்டுக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

இதற்கான அறிவிப்பு ஜனவரியில் வெளியாகுமென்று தெரிகிறது.

புதிதாகப் பதவி எற்றிருக்கும் சட்ட அமைச்சர் சுகரவர்த்தி, இதுபற்றி ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

## எகிப்தியருக்கு சூடான் பிரதமர் எச்சரிக்கை

சூடான் மந்திரி சபை மீது செய்ரோ வானொலியும், எகிப்து பத்திரிகைகளும் வசைமாரி பொழிவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று சூடான் பிரதம மந்திரி அஸ்காரி எச்சரித்துள்ளார்.

“சூடான் மந்திரி சபையில் உள்ள வேற்றுமைகளை விட்டு விடுங்கள்,” என்று எகிப்து உள்நாட்டிலாகா அமைச்சர் கூறியதை சூடான் பிரதமர் கண்டித்துள்ளார்.

“இதுபோன்ற பேச்சுக்களும், சூடான் அமைச்சர்களைத் தாக்கிப் பேசுவதும் எகிப்து—சூடான் உறவுக்கு உகந்தது அல்ல,” என்று அவர் மேலும் எச்சரிக்கை செய்தார்.

## திரு-தமிழக போராட்ட வழக்குகள்

### வேறு மாநிலத்திற்கு மாற்றும்படி மனு தாக்கல்?

திருவனந்தபுரம், டிச. 23—

திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தை யொட்டி, குழித்துறையிலும், பத்மனபபுரம் மாஜிஸ்திரேட் கோர்ட்டிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் சம்மந்தப்பட்ட நகல்களை தி. த. நா. கா. பிரமுகர் எ. நேசமணி அவர்கள் டெல்லிக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இவ்வழக்குகளை திரு—கொச்சி நீங்கலாக வேறு எதாவதொரு மாநிலத்தில் விசாரிக்கும்படி கேட்டுக்கொண்டு விரைவில் டில்லி தலைமை உயர்நீதி மன்றத்தில் (சுப்ரீம் கோர்ட்) மனு தாக்கல் செய்யப்படுமெனத் தெரிகிறது.

* * *

### வழக்குகள் ஒத்திவைப்பு

தக்கலை, டிச. 23—

திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தன்று நாகர்கோவிலை அடுத்துள்ள திங்கட்கிழமை சந்தையெனும் இடத்திலுள்ள ஒரு கடையில் கல்வீசி குழப்பமுண்டுபண்ணியதாக 20 பேர்கள் மீது இரணியல் போலீசார் தொடர்ந்துள்ள வழக்கொன்றையும், இரணியல் ஐயப்பனுங்குளத்துக்கு அருகே அன்று தந்திக் கம்பிகளை அறுத்ததாக 9 பேர் மீது இரணியல் போலீசார் தொடர்ந்துள்ள ஒரு வழக்கையும் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பத்மனபபுரம் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட், வழக்கு விசாரணையை அடுத்த ஜனவரி திங்கள் 3-ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

கருங்கல்லில், இரணியல் போலீசாரால் கைது செய்யப்பட்ட எஸ். வேதநாயகம் (கருங்கல் ஊரைச் சேர்ந்தவர்) ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

## சந்திக்க நேரமில்லை

சில முக்கியமான வேலைகளைத் தாம் கவனிக்க வேண்டியதிருப்பதால் பாக். பிரதமரை இப்போது வெகு சீக்கிரமாகச் சந்திக்க இயலாதென்று, இந்தியப் பிரதமர் நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

* * *

### ரஷ்யா செல்லும் யோசனையும் கிடையாதாம் !

லண்டனில் நடைபெறவிருக்கும் ‘காமன் வெல்த்’ நாடுகளின் பிரதமர்கள் மாநாடு முடிவுற்றதும் நேராக இந்தியாவிற்கே திரும்பிவிடப் போவதாகவும், இடையில், லண்டனிலிருந்து ரஷ்யாவுக்குச் செல்லும் யோசனை தமக்கில்லையென்றும் நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

# மதுரை மாநாடுகள்

‘மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் முறையே 1955 ஜனவரித் திங்கள் 8, 9-ந் தேதிகளில், மதுரை-ஆரப்பாளையம், ஞான ஒளிவுபுரத்தில், சௌந்தர பாண்டியனுர் பந்தலில் நடைபெறும்.

**8—1—55 சனி :**

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர் : சத்தியவாணிமுத்து

திறப்பாளர் : தில்லை-வில்லாளன்

**9—1—55 ஞாயிறு :**

அரசியல் மாநாடு

தலைவர் : மு. கருணநிதி

திறப்பாளர் :

எம்.பி.சுப்பிரமணியம், எம்.எல்.ஏ.

மாநாட்டிற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

தொண்டர் படை திரட்டப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாநாடுகளில் பொதுச் செயலாளர் அண்ணதுரை உட்பட கழக முன்னணி வீரர்கள் பலரும் கலந்துகொள்கின்றனர்.

இரு நாட்களிலும் நாடகங்கள் உண்டு,”

என்று, மாநாட்டுச் செயலாளர் தோழர் மதுரை எஸ். முத்து அறிவிக்கிறார்.

# செய்திச் சுருள்

★

### தொண்டர் படையினர் சேவை

26—12—54ல், நடக்க இருக்கும் இடையக்கோட்டை தி. மு. கழக ஆண்டு விழாவிற்கு, கல்வார்பட்டி கழகத் தொண்டர் படையினர் சுமார் 100 பேர் கால்நடையாக நடந்து சுற்றுப்புற ஊர்களில் ஆண்டு விழா பற்றி விளம்பரம் செய்துவிட்டு, மாலை 2 மணிக்கு இடையகோட்டை போய்ச் சேருவார்கள்.

### சென்னை தொழிலாளர்சங்க முற்போக்கு குழு துவக்கம்

19—12—54 காலை 9 மணிக்கு, சென்னை டிமலஸ் ரோடிலுள்ள எகாத்தம்மன் கோவிலில், தோழர் கே. தியாகராசன் தலைமையில், 200-க்கும் அதிகமான சென்னை பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள், சென்னை தொழிலாளர் சங்க உறுப்பினர்கள், முன்னுள் சங்க நிர்வாகிகள் ஆகியோர் கூடி புதியதொரு முற்போக்குக் குழு துவக்கினர்.

அக்கூட்டத்தில், சென்னை தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை அவர்களின் போக்கைக் கண்டித்தும், இனிமேல் உண்மையான தொழிலாளிகளே சங்கத்தின் தலைமைப் பதவி, நிர்வாகப் பொறுப்புகளை எற்றுக்கொள்ளுவதெனவும், தொழிற்சங்க அனுபவமுள்ள பல அரசியல் கட்சிகளைச் சார்ந்த எட்டுப் பேரை சங்க ஆலோசனையாளர்களாகச் சேர்த்துக் கொள்வதெனவும், இவைகளை யெல்லாம் நடைமுறையில் அமுல் செய்ய, சங்க உறுப்பினர்களின் முற்போக்குக் குழு ஒன்று அமைத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர், மில் பூராவிலுமுள்ள இலாகாவாரியாக பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, செயலாளர்களாகத் தோழர்கள் எம். வி. எழுமலை, ஜி. பழனிவேலு, ஆர். முனுசாமி ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

சென்னை தொழிலாளர் சங்கத்தில் தொழிலாளிகளே முழு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், இக்குழு கலைக்கப்பட்டுவிடும் என்றும் முன்னுள் உதவி தலைவர் தோழர் கே. தியாகராசன் (எம். எல். யு.) தெரிவிக்கிறார்.

### புதுவை மீனவர் ஐக்கிய முன்னணி பிரதிநிதிகள் மாநாடு

19—12—54 மாலை 3 மணிக்கு, புதுவை அக்காசாமி மடத்தில், திரு. எ. மாரியப்ப மணியக்கார் தலைமையில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில், சாதிபேதமற்ற தொழில் அடிப்படையில் மீனவர் ஐக்கிய முன்னணி வளர்ந்து வருவதையும், மீனவர் கொடியின் கோட்பாடுகளையும் பொதுவான திட்டங்களையும் விளக்கி தோழர்கள் பலர் பேசியபின் :,புதுவையில் வருகிற ஜனவரி திங்களில் ஒரு மாநாடு நடத்துவதெனவும், அதை நடத்துவதற்கான முழு பொறுப்பையும் தோழர் என். ஜீவரத்தினத்திடம் கொடுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

* * *

### கொடியேற்று விழா

19—12—54 மாலை 3 மணிக்கு சென்னை-இராயபுரம், காசிபுரம் மீன் பிடிப்போர் கிளைச் சங்க சார்பில், சங்கக் கட்டிடத்தில், புதுவை வட்டார மீனவர் ஐக்கிய முன்னணி ஆரம்பக்கூட்டத்தை யொட்டி, தோழர் பி. கோவிந்தன் தலைமையில் தோழர் பி. பி. ராமசாமி மீன் கொடி யேற்றினர். பின்னர், பிரெஞ்சு ஆதிக்கத்தினின்று விடுவிக்கப்பட்ட புதுவை வட்டார மீனவர் நிலைமை குறித்து தோழர்கள் சின்னப்பன், பி. இருசப்பன், டி. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### மதுரை அறிவு வளர்ச்சி படிப்பகம்

16—12—54 இரவு 8 மணிக்கு, தோழர் கா. பி. மதியரசன் இல்லத்தில், தோழர் எ. எஸ். கலைநேசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், அரை ஆண்டு வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது :— தலைவர் : எஸ். எம். யாகுப் ; செயலாளர் : கா. பி. மதியரசன் ; துணைச் செயலாளர் : எம். காசீம் ; பொருளாளர் : எஸ். பி. எஸ்’ ஹமீது ; விளம்பர உறுப்பினர்கள்: கே. ஆர். எ. பிறைசூடி, எம். சுல்தான் ; படிப்பக பொறுப்பாளர் : கே. முகமது கனி. செயற்குழு உறுப்பினர்கள் : காதர், ஜலால், நயினர், முகமதுகனி, சிக்கந்தர், பாடகர் சரீப், சத்தியசீலன், கலைநேசன், இளம்பிறை, பாக்கியராசன், மய்தீன், நாதன்.

பின்னர், தோழர்கள் மதியரசன், சத்தியசீலன், பிறைசூடி, காதர் ஆகியோர் பேசியபின் பொங்கல் திருநாளை சிறப்புற கொண்டாடுவதெனவும், கைத்தறி துணிகளையே வாங்கும்படி மக்களிடம் கேட்டுக்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன், பொதுச் செயலாளர் அண்ணு அவர்களின் மைத்துனர் அரங்கநாதன் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

### கடம்பூர் மறுமலர்ச்சி நாடக மன்றம்

15—12—54 இரவு 8½ மணியளவில், தோழர் எம். எஸ். பி. சாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்ற செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், புதிய நாடக சட்ட மசோதாவைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### பிறப்பு

சேலம் 11-வது வட்ட தி. மு. கழகத் தோழர் கே. கோபால் அவர்களின் துணைவியார் தோழியர் சரசு அவர்களுக்கு 6–12–54ல் பெண் மகவொன்று பிறந்தது. தாயும்—சேயும் நலம். அதன் நினைவாக “நம் நாடு” வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது— வரப்பெற்ரேம்—நன்றி—பொறுப்பாளர்.

### திருமணங்கள்

13—12—54 காலை 10 மணிக்கு கடம்பூரில், தோழர் மாரியப்ப (நாடார்) மகள் தோழியர் செல்லத்தாய்-தூத்துக்குடி தோழர் செயராசன் திருமணம் தோழர் எம். ஆர். ஜனு தலைமையில் நடைபெற்றது. மணமக்கட்குப் பல தோழர்களாலும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பப்பட்டிருந்தன. மணமக்களைப் பாராட்டிப் பலர் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக, ‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது — பெற்றுக் கொண்டோம்—நன்றி— பொறுப்பாளர்.

* * *

12—12—54ல், தாத்தையங்கார்பேட்டையில், தோழர் மு. பெ. முத்துக்கருப்பன் தலைமையில் தோழர் சு. கிருஷ்ணன்—தோழியர் லட்சுமி சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர் நாராயணன் ‘சீர்திருத்தத் திருமணம்’ என்பதுபற்றிசொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக ‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—பெற்றுக்கொண்டோம்— நன்றி பொறுப்பாளர்.

* * *

12—12—54 காலை 8½ மணியளவில் கடம்பூரில், தோழர் கா. அருணசலம்—தோழியர் சங்கரம்மாள் திருமணம் தோழர் எம். ஆர். ஜனு தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி பல தோழர்கள் பேசினர்.

# உலகம் காணுத புதுமை இந்த நாடக மசோதா!

## மூட நம்பிக்கையைக் கண்டித்தால் தண்டிக்க வேண்டுமா ?

## நாடக மசோதாவுக்கு சக்கரை செட்டியார், கஜபதி நாயகர் கண்டனம்

“இந்த மசோதா உலக சரிதம் காணுத புதுமை; அறிவுக்கு அளிக்கப்படும் சுதந்திரத்தின்பால் கடந்தகால சரித்தில் இதுபோன்ற மசோதா காணப்பட்டது கிடையாது.”

“எலிசபெத் மகாராணியின் காலத்தில் இங்கிலாந்தில் இதுபோன்ற மசோதா ஒன்று இருந்திருக்குமானுல், இப்போது பலராலும் படிக்கப்படும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை நாம் பெற்றிருக்க முடியுமா? ‘வெனிஸ் நகரத்து வியாபாரி’ என்ற நாடகம் லேவாதேவிக்காரர்களைக் கண்டிக்கிறது; இதை நாம் பெற்றிருக்க முடியுமா? அரசியலைக் கண்டித்தும், மத குருமார்களைக் கண்டித்தும், மத உணர்ச்சிகளைக் கண்டித்தும்கூட நாடகங்கள் தோன்றியுள்ளன.”

“........இதுபோன்ற நடவடிக்கைகளால் மக்களின் திறமையை அழித்துவிட முடியாது. இந்த மசோதாவைக் கோண்டுவருமாறு சர்க்காரைத் தூண்டியவர்கள்மீது மற்ருெரு வகுப்பு மக்கள் வெறுப்படையுமாறு செய்யவே இந்த மசோதா பயன்படும்.”

*—என்று தோழர் சக்கரைச் செட்டியார் சென்னை மேல் சபையில் நாடக மசோதாவை எதிர்த்துப் பேசுகையில் கூறினுர்.*

“எழுதப்பட்ட, அல்லது பேசப்படுகிற கருத்துக்கள் துவேஷத் தன்மை வாய்ந்தது என்ருல், அதை எதிர்ப்போர் தக்க ஆதாரங்களுடன் எதிர்த்து வாதிக்கட்டும்; மக்கள் ஒரு முடிவிற்கு வரட்டும்; இந்த தடையைத் தான் நான் விரும்புகிறேன்,” என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னுர்:—

“ஒரு நாடகத்தைப் பற்றி ஆர்ப்பாட்டம் இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள்; அதைத் தடுக்க, மக்கள் அந்த நாடகத்தைப் பகிஷ்காரம் செய்வதுதான் சிறந்த வழி. ஒரு குறிப்பிட்ட கொள்கையை சர்க்கார் ஆதரிப்பதைவிட நாடகத்தைப் பகிஷ்காரம் செய்வது சிறந்த வழியா?”

“மனித உள்ளத்தில் புதிய செய்திகளைத் தெரிந்துகொள்ளும் ஆவல் என்பது, உள்ளத்துடன் இணைந்துள்ள ஒன்ருகும்; ஒரு நாடகத்தைக் கண்டிப்பது என்பது, எதைக் கண்டிக்கிருர்கள் என்று பார்க்க வேண்டும் என்ற ஆவலைத்தான் மக்களிடையே தூண்டிவிடும்.”

தோழர் கஜபதி நாயகர் பேசுகையில், “இந்த நாட்டில் இதுபோன்ற மசோதா எங்கும் இருந்ததில்லை,” என்று குறிப்பிட்டார்.

“இந்த நாட்டில் பல மதங்கள் உண்டு; எங்கும் நிறைந்த கடவுள் நம்பிக்கைகொண்ட மதமும் சிலை வணக்கத்தால் நம்பிக்கை கொண்ட மதமும் உண்டு. மூட நம்பிக்கைகளில் தனக்கு நம்பிக்கையில்லை என்று ஒருமனதாகக் கூறி அதைக்கண்டித்தால் நாம் அவன் மீது குற்றம் சாட்டவேண்டுமா?” என்று அவர் மேலும் கூறினுர்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

“இந்த மசோதா, தங்களுக்குச் சாதகமாக உள்ள ஒரு சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காகவே கொண்டு வரப்படுகிறது. நான் மதத்தில் நம்பிக்கையுடையவன்; மதம், மனிதனின் அறிவுக்குச் சம்பந்தமானது; அவன் ஒழுக்கத்தைப் பொறுத்தது என்கிறேன்; இப்போது கடைபிடிக்கப்படும் முறைகள் நிலைமையை மோசமாக்கவே பயன்படும் என்று கருதுகிறேன்.”

## ஆவடி காங்கிரசுக்கு வருவோர்

### அபாயத்திலிருந்து காப்பாற்ற அறிவிப்புப் பலகைகள்

சென்னை, டிச. 23—

இதுவரை விபத்துக்கள் நடைபெற்ற இடங்களில் அறிவிப்புப் பலகைகள் வைப்பதென்று செங்கற்பட்டு போக்குவரத்து போர்டார் முடிவு செய்துள்ளனர்.

“இந்த இடத்தில் கோர விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன,”

என்று அங்கே அறிவிப்புகள் இருக்குமாம்.

அகில இந்திய காங்கிரசின் மாநாடு ஆவடியில் துவங்குவதற்கு முன்னர் இந்த அறிவிப்புப் பலகைகளை வைக்கவேண்டுமென்றும், ஆகவே இதற்காக ரூ. 500 அனுமதிக்குமாறு சர்க்காரைக் கோருவதென்றும் முடிவு செய்யப்பட்டதாம்.

## நேரு பயணம்

புதுடில்லி, டிச. 23—

இந்தோனேஷியாவில் நடைபெறும் கொழும்பு நாடுகள் மாநாட்டை முன்னிட்டு ஜகார்தாவுக்குச் செல்வதற்காக பண்டித நேரு விமான மூலம் பாங்காங் பயணமானுர்.

திரு. வி. கே. கிருஷ்ண மேனன், வெளிநாட்டிலாகா மந்திரி டாக்டர் சையது முகம்மது ஆகியோரும் அவருடன் செல்கின்றனர்.

டிசம்பர் 28-ந் தேதியன்று ஜகார்தாவிலிருந்து 30 மைல் தொலைவில் உள்ள போகாரா எனும் இடத்தில் கொழும்பு நாடுகள் மாநாடு கூடுகிறது.

## தமிழ் மொழியில் மேல்சபை நடவடிக்கை

## கழகக் கூட்டங்கள்

★

**சென்னை**

கோமளீஸ்வரன்பேட்டை,
காஞ்சீவரம் பச்சையப்ப முதலி தெரு
(சித்ரா டாக்கீஸ் பின்புறம்)

**25—12—54 மாலை 6 மணிக்கு**

தலைவர்: ஆர். டி. அரசு

பேசுவோர்:
என். வி. நடராசன்
கண்ணதாசன்
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

★

**திருச்சி**

தி. மு. கழக சிறப்புக் கூட்டம்
தேவர் மன்றத்தில்

**26—12—54 காலை 9 மணிக்கு**

தலைவர்: எஸ். வி. லிங்கம்

பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்
இசை: நாகூர் அனிபா
நன்கொடை: அணு

* * *

டவுன் ஹால் மைதானத்தில்

**26—12—54 மாலை 6 மணிக்கு**

தலைவர்: அன்பில் தர்மலிங்கம்

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
எம். எஸ். மணி

★

**திருத்துறைப்பூண்டி**

தெற்கு வீதியில்

**26—12—54 மாலை 6 மணிக்கு**

பேசுவோர்:
என். வி. நடராசன்
ந. இராமசாமி
ந. தருமலிங்கம்

★

**வடுகர்பேட்டை**

தேரடியில்

**26—12—54 மாலை 6 மணிக்கு**

பேசுவோர்:
எஸ். நெடுமாறன்
அன்பில் தர்மலிங்கம்
அ. தம்புசாமி
செங்குட்டுவன்
அதியமான்

★

**சோழவந்தான்**

வைகை திடலில்

**26—12—54 மாலை 6 மணிக்கு**

பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எஸ். முத்து
கே. எஸ். சந்தானம்
சௌந்திரராசன்

### ஜே. எஸ். மாணவர் சங்கம் துவக்க விழா

25—12—54 மாலை 4 மணிக்கு, திருக்கழுக்குன்றம், எண். 47, மேட்டுத் தெருவிலிருக்கும் ஜே. எஸ். மாணவர் சங்கத்தை, தோழர் எஸ். வி. கண்ணன் தலைமையில் தோழர் மு. கருணாநிதி துவக்கி வைத்து, தென்னண்டை மாட வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் வள்ளுவர் திடலில் சொற்பொழிவாற்றுவார். தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் நூல் நிலையத்தைத் திறந்து வைத்து சொற்பொழிவாற்றுவார். மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

## மறுமலர்ச்சிக் கழக ஆண்டு விழா

காஞ்சீபுரம், டிச. 24—

25, 26—12—54 ஆகிய இரு நாட்களிலும் நடைபெறுவதாக இருந்த மேற்படி கழக ஆண்டு விழா, விடா மழையின் காரணமாக வேறு தேதிகளுக்குத் தள்ளி வைக்கப்பட்டு இருக்கிறது என செயலாளர் கே. கண்ணன் அறிவிக்கிருர்.

## கே. கே. நீலமேகம்

சென்னை, டிச. 24—

தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தன் சொந்த அலுவல் காரணமாக குன்னூர் சென்றிருந்தவர் ஒரு திங்களுக்குப் பிறகு இன்று சென்னை திரும்பினுர். நாளைய தினம் கும்பகோணம் செல்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

### சொற் பயிற்சிக் கூட்டங்கள்

26-12-54 காலை 8-30 மணிக்கு, சென்னை 50-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் [illegible] தலைமையில் ‘[illegible]’ எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

மாலை 2 மணிக்கு, சென்னை 50-வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கூடி, [illegible] பரிசீலனையும், திராவிட [illegible] பற்றியும் தீர்மானிக்கப்படும்.

* * *

26-12-54 காலை 9 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில் (எண் 2, [illegible] தெரு, மயிலாப்பூர்) தோழர் [illegible] தலைமையில் ‘இன்றைய அரசியல்’ என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

### ‘பராசக்தி’—திரைப்படம்

26-12-54 காலை 9 மணிக்கு, வேலூர் [illegible] தியேட்டரில், வேலூர் தி. மு. கழக [illegible], தோழர் என். எஸ். ராசேந்திரன் தலைமையிலும், தோழர்கள் டி. வி. நாராயணசாமி, என். எஸ். தென்னரசு ஆகியோர் முன்னிலையிலும் ‘பராசக்தி’ திரைப் படக் காட்சி நடைபெறும்.

## மேற்கொள்வது குறித்து விவாதம்

சென்னை மேல்சபையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், சபை இயக்கத்திற்குமான நடைமுறை விதிகள் பற்றி பொறுக்குக் குழுவினர் செய்துள்ள சிபாரிசுகளை, மேல்சபையில் மந்திரி பக்தவத்சலம் பிரரேபித்தார்.

சபை அவற்றை ஏற்றுக்கொண்ட பின் ஒவ்வொரு பிரிவும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

61-வது விதி, சபை எந்த மொழியில் நடைபெற வேண்டுமென்பதைப் பற்றியதாகும்.

‘சபை நடவடிக்கைகள் ஆங்கிலத்திலேயே நடைபெறும்,’ என்று விதி கூறுகிறது.

தமிழ் மொழியில் ஒரு அங்கத்தினரால் கேள்வி கேட்கப்பட்டால் தமிழிலேயே பதிலளிக்கப்படலாமெனவும், பதிலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக்கொள்ளலாமெனவும் திரு. டி. புருஷோத்தம முதலியார் ஒரு திருத்தம் பிரரேபித்தார். திருத்தத்தை திருவாளர்கள் ஏ. கஜபதி, வி. வி. ராமசாமி, சிதம்பரம், தெய்வசிகாமணி, அண்ணாமலைப்பிள்ளை, நாராயணசாமிப்பிள்ளை முதலானோர் ஆதரித்தனர்.

திருவாளர்கள் ரஜாகான், அல்லாபிச்சை, கோவிந்தமேனன், டாக்டர் வி. கே. ஜான் முதலானோர் திருத்தத்தை எதிர்த்தனர்.

“சென்னை மாநிலத்தில் பெரும்பான்மையான மக்கள் தமிழர்கள்; எனவே, அவர்களுக்குப் புரியும் வகையில் சபையின் நடவடிக்கைகள் இருப்பதே ஜனநாயகம்”

என்று திருத்தத்தை ஆதரித்தவர்கள் எடுத்துக் கூறினுர்கள்.

சென்னை, மலையாளிகள், கன்னடியர்கள் ஆகியோரும் வாழும் ஒரு கூட்டு மாநிலம் எனவும்; இவ் விஷயத்தில் அவர்களுடைய நலன்கள் புறக்கணிக்கப்படக்கூடாது என்றும், இந்திய மக்கள் சபையில் நடவடிக்கைகள் இந்தியில் நடைபெறும்போது தமிழ் உறுப்பினர்கள் அவதிப்படுவதைப் போலவே இங்கும் தமிழில் நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டுமானுல் மலையாள கன்னட உறுப்பினர்கள் அவதிப்பட நேரிடுமென்றும் திருத்தத்தை எதிர்த்தவர்கள் கூறினர்.

மேலும், கோவிந்தமேனன் பேசுகையில், “சபை நடவடிக்கைகள் தமிழில் இருக்கவேண்டுமென்பது, தமிழ் ஏகாதிபத்தியமாகும்” என்று குறிப்பிட்டார்.

பின்னர் மந்திரி பக்தவத்சலம், விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

“பெரும்பாலான தமிழ் மக்களின் உணர்வுகளை ஆட்சியிலிருப்போர் உணராமலிருக்க முடியாது. ஆங்கிலம் தெரியாதவர்கள் பலர் இருக்கிருர்கள். தமிழ் தெரியாதவர்கள் அநேகமாக இருக்க முடியாது; மலையாளிகளுக்கும், கன்னடியர்களுக்கும் தமிழ் மொழி ஓரளவேனும் புரியக் கூடும்; ஆகவே, பெரும்பாலான தமிழ் மக்களின் அபிலாஷை குறித்து ஏதேனும் செய்தாக வேண்டும்: இது பற்றி, தலைவரின் ஆலோசனையின் படி சபையின் அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யலாம்,” என்று கூறினுர்.

திருத்தம் வாபஸ் பெறப்பட்டது.

## மருத்துவக் கல்லூரி மாணவிகள் விடுதி விதிகளை எதிர்த்தனர்

### சம்பவம் பற்றி மேல் சபையில் சர்க்கார் விளக்கம்

சென்னை, டிச. 23—

வடசென்னை ‘ஸ்டான்லி’ மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளின் விடுதியில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும், மாணவர் விடுதி அதிகாரி (வார்டன்) இராஜிநாமா செய்ய வற்புறுத்தப்பட்டதின் காரணங்களும் மேல் (சட்ட) சபையில் கூறப்பட்டன.

“அந்த மாணவர் விடுதியிலிருக்கும் மாணவிகள் இரவு 8 மணிக்குள் விடுதிக்கு வந்துவிட வேண்டுமெனவும், வாரமொரு முறை மட்டும் இரவு 10 மணிக்குத் திரும்பலாமெனவும் விதிகள் உண்டு.

இந்த விதிகளை மீறி தாமதமாய் வருவோர், அங்குள்ள புத்தகத்தில் எழுதிவிட்டு வரவேண்டுமென்றும், மறு நாள், தாமதமாக வர நேர்ந்ததின் காரணங்களை வார்டனிடம் விளக்க வேண்டுமெனவும் விதி உள்ளது.

‘இந்த விதிகளை மாணவிகள் சரிவர அனுசரிப்பதில்லை,’ என்று கூறி, வார்டன், இரவு 8 மணிக்கு மேல் கதவைத் தாளிட்டு விடும்படியும், நேரம் கழித்து வருபவர்கள் வேறொரு வழியாக வந்து தன்னைச் சந்தித்துவிட்டு இல்லம் திரும்ப வேண்டுமென்றும் விதி வகுத்தார்களாம்.

ஒரு மாணவி, ஒரு நாள் இரவு நேரங் கழித்து வந்தபோது, கதவு தாளிட்டிருப்பதைப் பார்த்துவிட்டு உறவினர் இல்லம் சென்று தங்கிவிட்டு மறுநாள் வந்ததாகத் தெரிகிறது.

“இம்மாதிரி நாங்கள் வெளியில் சென்று வருவதைக் கட்டுப்படுத்துவது சரியல்ல; நாங்கள் என்றும் சிறு குழந்தைகளல்ல; பொறுப் புணர்ந்த வயதுவந்த மாணவிகள்,” என்று, 64 மாணவிகள் கையொப்பமிட்டு மனுச் செய்தார்களாம். இதையொட்டி, வார்டன், 12 மாணவிகளின் பெற்ருேருக்கு அவர்களுடைய பெண்கள் சரிவர விடுதி விதிகளை அனுசரிப்பதில்லையாதலால் அவர்களை வேறு இடத்தில் குடியேற்றுமாறு கடிதம் எழுதினுராம். பெற்ருேர்களும் தங்கள் பெண்களைக் கடிந்திருக்கின்றனர். இதை ஆட்சேபித்து, விடுதி மாணவிகள் ஒன்று சேர்ந்து, கல்லூரி அதிகாரிக்கு புகார் வரைந்துள்ளனர். அவர், ‘மாணவிகள் இப்படி மனுச் செய்தது தவறு,’ எனக் கூறி, அவர்களை மன்னிப்புக் கேட்க வைத்திருக்கிருர்: அதேபோல், பெற்ருேருக்கு மாணவிகளைப் பற்றி எழுதிய வார்டனும் மன்னிப்புக் கேட்டிருக்கிருர்.

திருமதி வத்சலா என்ற அந்த வார்டனை, முதல் நாளிரவு மாணவிகள் ஒரு அறைக்குள் பூட்டி வைத்து ‘கலாட்டா’ செய்ததாக அவர் கூறினுர். மேலும் தொடர்ந்து தாம் பதவியிலிருக்க விரும்பவில்லையென்றும் கூறினுர்.

அதையொட்டி மாணவிகளுக்கும் அவருக்கும் திருப்திகரமான உறவு இல்லையாதலால், அவரை பதவியிலிருந்து விலகிக்கொள்ள கல்லூரி அதிகாரி உத்திரவிட்டார். பின்னர், திருமதி சாரதா சுப்பிரமணியம் என்ற பேராசிரியை வார்டனுக நியமிக்கப்பட்டு “நிலைமை சுமுகமாக உள்ளது,” என்று கல்லூரி அதிகாரி அரசாங்கத்திற்கு அனுப்பிய அறிக்கை கூறுகிறது.

இந்த அறிக்கைக்குப் பிறகு மந்திரி கல்லூரிக்குச் சென்று பார்வையிட்டதாகவும், எனவே, மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் தேவை இல்லை என்றும் மந்திரி தெரிவித்திருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,